வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 210/2022

வழக்கு சாட்சி- **அ.சா. 1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | எஸ்தர் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராசு | : | தொழில் | விவசாய வேலை |
| கிராமம் | ஒரத்தூர் | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 55/2024 |

(எதிரிகள் ஆஜர் )

**நாள் : 18.03.2024**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக நான் எனது வீட்டில் இருந்தபோது இரவு 9.00 மணியளவில் 1ம் எதிரி செல்வி என்னை சட்டத்தால் இடது கன்னத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினார். 2ம் எதிரி என்னை தலைமுடியை பிடித்து கையால் என்னை அடித்தார். நான் தஞ்சாவூர் TMCH க்கு சிகிச்சைக்காக சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அது நான் அளித்ததுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**